
Vol. 9 | Special Issue 1 | April 2022 | P-ISSN: 2321-788X

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)



## பன்னாட்டுக் கருத்தரங்கம்

# தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

7.04.2022 & 8.04.2022

தொகுதி 1

## தமிழ்த்துறை

## நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி



கோவிலூர், காரைக்குடி 630 307

(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது)

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

PKP PUBLIC KNOWLEDGE PROJECT

OJS OPEN JOURNAL SYSTEMS

SHANLAX JOURNALS


editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

SHANLAX
#SINCE1990

# SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES


Vol- 9 Special Issue 1 April 2022

P-ISSN: 2321-788X Impact Factor: 3.025


நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி

(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது)

கோவிலூர், காரைக்குடி 630 307

தமிழ்த்துறை


நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022

## தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

தொகுதி I

| | | |
|---|---|---|
| 14 | மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம்<br>முனைவர் பெ. குபேந்திரன் | 62 |
| 15 | கோவலன் - கண்ணகி எனும் மானுட நேயர்<br>முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை | 67 |
| 16 | கிறிஸ்தவம் (புதிய ஏற்பாடு) காட்டும் மனிதநேயம்<br>முனைவர் யா. சாம்ராஜ் | 71 |
| 17 | சோ.தர்மன் படைப்புகளில் மனிதநேயச் சிந்தனைகள்<br>அ. முத்துக்குமார் | 76 |
| 18 | கம்பராமாயணத்தில் மனிதநேயம்<br>சே. வா. ஆக்னஸ் பிரிஸ்கா & முனைவர் சு. ரவி ஜேசுராஜ் | 80 |
| 19 | "மனிதநேயச் சிந்தனையை உலகிற்களித்த தமிழ் அற இலக்கியங்கள்"<br>முனைவர் தே. ஷீஜா | 84 |
| 20 | பாவேந்தர் படைப்புகளில் மனிதம்<br>முனைவர் டே. பியூலா | 90 |
| 21 | மனிதம் போற்றும் நந்தா விளக்கம்<br>முனைவர் மு. துர்கா தேவி | 95 |
| 22 | வீரயுக நாயகன் வேள்பாரி புதினத்தில் மனிதநேயம்<br>ம. இந்துஜா பிருந்தா & முனைவர். தா. ஷமிலா ஜோஸ்டர் | 99 |
| 23 | பாரதிதாசன் கட்டுரைகளில் மனிதநேயம்<br>அ. அன்புநிலவன் | 105 |
| 24 | புறநானூறு பாடியோரின் மனிதநேயக் கருத்துக்களில் சிறுதுளிகள்<br>ம. விமலாராணி & முனைவர் மா. ரெத்தினேஸ்வரி | 109 |
| 25 | சிறுபஞ்ச மூலத்தில் மனிதநேயம்<br>முனைவர் ஜ.மோ. ஜெஸ்லின் நிமா | 113 |
| 26 | சங்க இலக்கியங்களில் மனிதநேயம்<br>முனைவர் ஜே. அந்தோணி சகாய சோபியா | 119 |
| 27 | வள்ளுவம் காட்டும் மனிதநேயம்<br>முனைவர் க. மேபல் ஜெயின் | 123 |
| 28 | புறநானூற்றில் மனிதநேயம்<br>முனைவர் மா. பாலசெல்வி | 127 |
| 29 | நாட்டுப்புறவியல் சமூகக் கதைப்பாடலில் மனிதநேயம்<br>ச. ரேகா | 130 |
| 30 | மணிமேகலையில் மனிதநேயம்<br>இ. அன்டோ மோனிகா & முனைவர் சூ.ஜ. இதயராஜா | 134 |
| 31 | நிலம் பூத்து மலர்ந்த நாள் நாவல் காட்டும் மனிதநேயம்<br>தே. கிறிஸ்டின் ஜூலியட் சுகிதா &<br>முனைவர் இரா. அந்தோணிராஜ் | 139 |
| 32 | கவிஞர் மீராவின் கவிதைகளில் மனிதநேயம்<br>ஆ. சுதாகர் & முனைவர் ச. சேதுகல்பனா | 144 |
| 33 | திருக்குறளில் உரைக்கப்படும் மனிதநேய மாண்புகள்<br>முனைவர் த. ஜெயராமு | 148 |
| 34 | நாலடியாரில் மனிதநேயம்<br>முனைவர் இரா. கலாஞானசெல்வம் | 152 |
| 35 | பதிற்றுப்பத்தில் மனிதநேயச் சிந்தனைகள்<br>முனைவர் கோ. தர்மராஜ் | 156 |
| 36 | நற்றிணையில் மனிதநேயப் பண்புகள்<br>சி. எலிசபெத்ராணி | 160 |
| 37 | புறநானூற்றில் மனிதநேய மாண்புகள்<br>இரா. கண்ணன் | 164 |
| 38 | திருக்குறள் சுட்டும் வாழ்வியல் நெறிகள்<br>வே. ஜெயமாலா & முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை | 167 |
| 39 | யுத்த காண்டத்தில் மனித நேயம்<br>நா. தனலெட்சுமி | 172 |

# கிறிஸ்தவம் (புதிய ஏற்பாடு) காட்டும் மனிதநேயம்

*முனைவர் யா. சாம்ராஜ்*
உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்புத்தூர், சிவகங்கை மாவட்டம்

**Volume: 9**
**Special Issue: 1**
**Month: April**
**Year: 2022**
**P-ISSN: 2321-788X**

கிறிஸ்தவம் என்பது தன்னை இழந்து பிறருக்காக அர்பணிப்பது. மெழுகாய் உருகி ஒளி கொடுப்பது. எதிர்வரும் துன்பங்களைப் பொறுமையோடு ஏற்று, நிலை வாழ்விற்கான மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்துவது. "சுவையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து" புனித நிலைக்கு இட்டுச் செல்வது. குறிப்பாக மனிதனை மனிதனாக மதிக்க, அளவில்லாமல் அன்பு செய்ய, அரவணைக்க வாழ்வு தர வழிகாட்டுவதாகும்.

இதைச் சமயம் சார்ந்து பார்த்தால் இரண்டு தன்மைகளைக் காணலாம். சமயப்பற்று - சமயவெறி: இவ்விரண்டுக்குமான வேற்றுமை என்ன? "தன்னை இழந்து பிறரைக் காத்தால் அது சமயப்பற்று. (A Zealot Protects all becasuse of his religion) பிறரைக் கொன்று சமயம் காத்தால் அது சமயவெறி. (A Fundamentalist Kills Others in the name of his religion)'' (நொபிலி - விவிலிய நாள் குறிப்பேடு - 2022 சிந்தனைப் பகுதி பிப்ரவரி - 16). கிறிஸ்தவத்தை நுட்பமாக ஆய்வு செய்தால் "மதம்" கடந்து "மனிதநேயம்" மட்டுமே கரைபுரண்டோடுவதை முழுமையாக உணரலாம்.

## திருவிவிலியம் - ஒரு பார்வை

கிறிஸ்தவத்தில் திருவிவிலியம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இருபெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன், இறைவன் வரலாற்றில் பேசிய 46 நூல்களில் தொகுப்பு பழைய ஏற்பாடு ஆகும். (யூதர்கள் மற்றும் கிறிஸ்தவ பிரிந்த சபையினர் 39 நூல் மட்டுமே என்பர்) இறைவன் இவ்வுலகை மீட்க மனித சாயலாக இயேசு கிறிஸ்து எனும் மாமனிதத்தை அனுப்பி மானுட விடுதலைக்கு வித்திட்ட 27 நூல்களின் தொகுப்பாக அமையப் பெற்றது புதிய ஏற்பாடு ஆகும்.

பழைய ஏற்பாட்டைக் கடந்து இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, பணி, இறப்பு, உயிர்ப்பு மற்றும் விண்ணேற்றம் ஆகியவற்றின் மூலம் புதிய ஏற்பாட்டில் மனித மறுமலர்ச்சியின் அடையாளங்களைக் காணமுடியும். குறிப்பாகப் புதிய ஏற்பாட்டில் இறையியல் சார்ந்த (Theological) முதல் நான்கு நூல்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) இயேசு

கிறிஸ்துவின் வாழ்வை முழுமையாக எடுத்துரைக்கின்றன. இவற்றில் எந்நிலையிலும் யாருடனும் ஒப்பிட முடியாத, எவருடனும் சமரசம் செய்து கொள்ளாத ஒரு தலைமைத்துவப் போராளியாக இயேசு கிறிஸ்துவைப் பார்க்க முடியும்.

### பகுத்தறிவுப் பகலவன்

மனித அறிவானது விரிவடைய வினாக்களின் அணிவகுப்பு மிக முக்கியமானதாகும். ஏன்? ஏதற்கு? எதனால்? எப்படி? யாருக்கு? யாரால்? என அடுக்கடுக்கான வினாக்களின் விளைவு மாற்றத்திற்கானத் திறவுகோலாகிறது. அன்றைய மதச் சம்பிரதாயங்களையும் சட்டங்களையும், கையில் எடுத்துக்கொண்டு குருட்டு வழிகாட்டிகளாய் வாழ்ந்தவர்களைத் தனது 12-வது வயதில் கேள்விகளால் நையப் புடைத்தார் இயேசு கிறிஸ்து.

லேவி என்னும் பெயருடைய வரிதண்டுபவர் ஒருவரைக்காண்கிறார். என்னைப்பின்பற்றி வா என்கிறார். அவரும் அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவின் பின் செல்கிறார். அன்று அவரின் வீட்டில் உணவருந்துகிறார். இதைப்பார்த்த மறைநூல் அறிஞர்கள், வரிதண்டுபவர்களோடும், பாவிகளோடும் சேர்ந்து உணவு உண்பது குடிப்பது ஏன்? என்ற கேள்விக்கு, இயேசு மறுமொழியாகச் சவுக்கடி பதில் தந்தார்.

"நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" (லூக்கா *5:31-32*) என்றார். இதுதான் மனிதம் போற்றும் செயல்.

விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை மறைநூல் அறிஞரும் பரிசேயரும், இயேசுவிடம் கூட்டிக்கொண்டு வந்து, அவரைச் சோதிக்கும் நோக்குடன் போதகரே! மோசே சட்டப்படி இப்படிப்பட்ட பெண்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது சட்டம். நீர் என்ன சொல்கிறீர் என்று கேட்டனர். அதற்கு இயேசு,

"உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்" (யோவான் *8:1-11*) என்று மறுமொழி கூறினார். இறுதியாகக் கல்லெறியக் காத்திருந்தவர்கள் ஒவ்வொருவராக ஓடிப்போக இயேசு அப்பெண்ணைப் பார்த்து, "இனிப் பாவம் செய்யாதீர்" என்றார்.

எவ்வளவு மேன்மையான செயல் எவ்வளவு பகுத்தறிவு. கற்பனை செய்ய முடியாத ஞானம். கடந்ததை மறந்து, இனியேனும் பாவம் செய்யாதிரு என்ற ஆறுதல் மருந்து, இனி பாவம் செய்வதைத் தடுகிறது. இதன் மூலம் உலகிலேயே தனித்தும் நிறைந்த மாமனிதர் இயேசு கிறிஸ்து என்பதைக் காட்டுகிறது. இவ்வாறு சமூக அழுக்குகளைச் சலவை செய்யும் விந்தை மனிதராகத் தயங்காமல் தட்டிக்கேட்டு அதற்கான தீர்வை முன்னெடுத்துரைத்தார்.

### மானுடம் போற்றுதல்

இயேசு கனிவின் பிறப்பிடம். அன்பின் ஆதி ஊற்று. ஏழைகளில் எழுச்சி நாயகன். இவ்வுலகில் பயணிக்கும் ஒவ்வொருவரும் தனித்தனியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதோடு, அவரவர் மனநிலையோட்டம் வேறுபட்டிருக்கும். ஏற்ற இறக்கம் மிகுந்திருக்கும் அனைவருக்கும் ஓர் வேண்டுகோள் விடுத்தார்.

"ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்" "ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. துயருறுவோர் பேறுபெற்றோர்"ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர்" ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச்சொத்தாக்கிக் கொள்வர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர்" ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்" ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்." (மத்தேயு *5:3-12*) என்று கூறினார். மனிதர் மீது அவருக்கிருக்கும் பேரன்பு அளப்பெரியது.

கொலை செய்யாதே, உன் சகோதர சகோதரிகளிடம் சினம் கொள்ளாதே. யாரையும் தரம் தாழ்த்திப் பேசிட வேண்டாம். நீங்கள் கோயிலுக்குச் செல்லும்போது உங்கள் சகோதர சகோதரிகளிடம் ஏதேனும் மனத்தாங்கல் இருப்பின் முதலில் அவர்களிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு கோயிலுக்குள் செல்லுங்கள். அப்போது உங்கள் வேண்டுதல் ஏற்கப்படும் என்றார்.

இன்றையச் சூழலில் பாலியல் வன்கொடுமை தலைவிரித்தாடும் நிலையில் மானுடம் தடுமாறிவிடக் கூடாது என்பதில் மிகவும் அக்கறையுள்ளவராய் இருந்ததை உணர்வு ரீதியாக உற்று நோக்க முடிகிறது.

"விபசாரம் செய்யாதே எனக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்" ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று" (மத்தேயு *5:27-28*) என்று முழக்கமிட்டார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதைக் குறிக்கும் நோக்கில் உடலால், உள்ளத்தால் அழுக்கில்லாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு மக்களுக்கு உரிமையோடு வேண்டுகோளை முன்வைத்தார்.

### பகைவரை அன்பால் பேணுதல்

"மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய்", எனும் உயரிய தத்துவத்தை மிக எளிமையாக உணர்த்தியவர் இயேசு கிறிஸ்து. பணம், பதவி, பட்டம், பகட்டு வாழ்க்கை, அதன் மூலம் உருப்பெறும் சண்டைகள், பழிக்குப் பழி, இரத்தம் பார்த்தல் இவையாவும் மனிதனுக்கு அழிவை உண்டாக்கும். எதைக் கொண்டு வந்தோம். எதைக் கொண்டு செல்ல, இறந்து போகும்போது எதையும் எடுத்துக் கொண்டு போவதில்லை. மண்ணோடு மண்ணாய் மட்கிப்போகும் நிலைதான் ஏற்படும், அதற்குள்ளாய் அன்பை ஆணிவேராக்குங்கள் என்றார் இயேசு கிறிஸ்து.

"நான் உங்களுக்குச் சொல்கிறேன். தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத்தேயு *5:39*)

"உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத்தேயும் *5:44*)

நீங்கள் கடவுளிடம் வேண்டும்போது, "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை, நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களையும் மன்னியும்" (மத்தேயும் *6:12*) என மன்றாடுங்கள் என்று குரல் எழுப்புகிறார்.

இதைவிட இன்னும் யாருமே யோசிக்க முடியாத சிந்தனையில், தனக்கு இன்னா செய்தவனை "எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? என்று கேட்டவரிடம், ஏழுமுறை மட்டமல்ல எழுபது தடவை, ஏழு முறை (அதாவது எண்ணற்ற முறை) என்று பதில் தந்தார். இயேசு மனிதர் மீது வைத்துள்ள பேரன்பை யாராலும் எடுத்து வைத்திட முடியாது.

### நோய்களைக் குணமாக்குதல்

இறைவன் படைப்பில் மகத்துவமுள்ளவன் மனிதன் மட்டுமே. அவன் கைமாறு கருதாமல் பிறருக்கு இயன்றதைச் செய்ய வேண்டும். வேதனையில் நிர்கதியற்றுக் காணப்படும்போது, நானிருக்கிறேன் கலங்காதே எனக் கைதூக்க வேண்டும். இயேசு கிறிஸ்து இதைச் செய்தார்.

"ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பார் எனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்" (மாற்கு *8:36*) இவ்வார்த்தை உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனையும் குத்திக் கிழிக்கும் பேராற்றல் கொண்டதாய்த் திகழ்கிறது. மனிதருக்குள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு சூழ்ந்துள்ள

நிலையில், தன்னை அண்டிவரும் அனைவரையும் அரவணைத்தார். பேய் பிடித்தோரைக் குணப்படுத்தினார். உடல் நலமுற்றோரைசுகமாக்கினார். ஊனமுற்றோரை நலமாக்கினார். பார்வையற்றோருக்குப பார்வையளித்தார். இறந்தோரை உயிர்ப்பித்தார். யாரையும் பேதம் பார்க்காத பெருந்தகையார் இயேசு கிறிஸ்து.

இயேசு தம் சீடர்களோடு சென்று கொண்டிருக்க அவ்வழியே "இயேசு வருவார்" என்ற நம்பிக்கையில் பார்வையற்ற ஒருவர் அமர்ந்திருந்தார். இயேசு வருவதை அறிந்த அவர்.

"தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என்று சத்தமாய்க் கதற, இயேசு என்னால் முடியும் என நம்புகிறாயா? என்றார். "ஆம் ஐயா" என்றவுடன். உன் நம்பிக்கை குணமாக்கிற்று என்று அவர் கண்களைத் தொட கண் பார்வை பெறுகிறது.

பன்னிரு ஆண்டுகளாய் ரத்தப் போக்கினால் வருந்திய ஒரு பெண். இயேசு வருவதை அறிந்து, "நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும், நலம் பெறுவேன்" (மத்தேயு 9:21) எனத் தனக்குள்ளே சொல்லிக் கொள்ள, இயேசு திரும்பிப் பார்த்தார். "மகளே, துணிவோடிரு, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" என்கிறார். மனிதன் மனிதனைத் தொட்டாலே தீட்டு, என்கிற அவலத்தை அடியோடு முறித்து, பரிவுள்ளம் கொண்டவராய் அனைவரையும் தொடுகிறார்.

**நிறைவாக**

அன்பால் இவ்வுலகை மீட்க வந்த கடவுளின் மகன் இயேசு கிறிஸ்து. தன்னைக் "கடவுள்" என எவ்விடத்திலும் அறிக்கையிடவில்லை. தம் பன்னிரு சீடர்களையும் பார்த்து, மானிடமகன் யாரென்று சொல்கிறார்கள் என்று கேட்க, ஒவ்வொருவரும் பலவிதமான பதிலைச் சொன்னார்கள். சீடர்களில் முதன்மையானவரான பேதுரு "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" (மத்தேயு 6.16:17) எனப் பதிலுரைத்தார். இதிலிருந்து இயேசு "கடவுள்" அல்ல. கடவுளால் அனுப்பப்பட்ட இறைமகன். தனது வல்லமையைத் தன் மகன் வழியாக உலகிற்குக் கடவுள் வெளிப்படுத்தினார் என்பதை அறியலாம்.

அன்பு பொறுமையுள்ளது. அது நன்மை செய்யும். கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் யாரும் தீமையில் தங்களைத் தக்கவைத்துக் கொள்ளாதபடிக்கு அவர்களை அன்பால் வழிநடத்தும் பேராசானாய்த் திகழ்ந்தார். எல்லாவற்றிற்கும் எல்லாமானார்.

சேன்ற இடமெல்லாம் நன்மை செய்தார். பிணிகளைப் போக்கினார். பரிவு கொண்டார். தனது போதனைகளால் இவ்வகிலம் மறுமலர்ச்சி காணப் போராடினார். ஆனால் இவ்வுலகம் அவரைக் கண்டுகொள்ளவில்லை. பயனைப் பெற்றுக் கொண்டு" பரிதவிக்கவிட்டது தான் மிச்சம். கேலி பேசினார்கள். கன்னத்தில் அறைந்தார்கள். காறி உமிழ்ந்தார்கள். தனது சீடரே (யுதாஸ்) பன்னிரு வெள்ளிக்காசுக்காக காட்டிக் கொடுக்கும் அளவிற்குக் கேடு நிறைந்து காணப்பட்டார்.

நல்லதை மட்டுமே செய்த இயேசு கள்வர்கள் நடுவில் கள்வராய் நின்றார். முள்முடி சூட்டினார்கள். சிலுவையைச் சுமக்க வைத்துக் கொடுமைப் படுத்தினார்கள். ஆணிகளால் இரத்தம் தெறிக்கக் கை கால்களில் அறைந்தார்கள். ஈட்டியால் விலாவைக் குத்திப் பிளந்தார்கள். மனித மீட்புக்காய்ப் போராடியவரை மனிதர்களே கொலை செய்தார்கள். எல்லாவற்றிலும் பொறுமையை மட்டுமே போர்வையாய்ப் போர்த்திக்கொண்ட இயேசு கிறிஸ்து இறப்பின் கடைசி நொடியிலும் கூடக் கடவுளைப் பார்த்து,

"தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக்கா 23:34) என்று மன்னிப்பின் பேரொளியாய் இம்மக்களுக்காய்க் கண்ணீரோடு வேண்டினார். உலகில் யாராலும் செய்ய முடியாத செயலை, அன்பின் வழியாகச் செய்து காட்டியவர் இயேசு கிறிஸ்து மட்டுமே. ஆகவே, இயேசு என்றொரு மானுடம் மகத்துவமிக்கது. இயேசு எனும் பேராளுமையை மதம் கடந்து சரியாகப் புரிந்து கொள்வதே, மனித இனம் அவருக்குச் செய்யும் மரியாதை ஆகும்.





**பார்வை நூல்கள்**

1. புதிய ஏற்பாடு (பொது மொழிபெயர்ப்பு) 1997, Tamilnadu Biblical, Catechetical & Liturgical Centre. Tindivanam, India - 604 002.
2. விவிலிய நாள் குறிப்பேடு 2022. நொபிலி வெளியீடு, நொபிலி மறைப்பணி நிலையம், கோ.புதூர், மதுரை - 625 007.
3. முனைவர் சேதுமணி மணியன், இயேசு என்றொரு மானுடம், 2016, செண்பகம் வெளியீடு, விசுவநாதபுரம், மதுரை - 625 014.